## நீர் கொழும்பு மாநகர சபை

## கம்பகா மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

#### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 23 இல் சபையின் முதல்வருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து நீர்கொழும்பு மாநகர சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை நிலையான வைப்பு மற்றும் நிலையான வைப்பிற்கான வட்டி ரூபா 248,527 கூடுதலாக கணிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டில் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நூலகப்புத்தகங்களின் இருப்பு கணிப்பீட்டின் படி மாநகர சபைக்கு சொந்தமான 7 நூலகத்தில் 100398 எண்ணிக்கையான நூலக புத்தகங்கள் இருந்த போதிலும் இவ் நூலக புத்தகங்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு இதுவரைக்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) மாநகர சபை நூலகத்திற்காக 2015 ஆண்டில் ரூபா 31,255 பெறுமதியான 147 புத்தகங்கள் நன்கொடையாக கிடைக்கப்பட்டிருந்த போதிலும் இவ் நன்கொடை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீண்டும் மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்த எந்த விதமான புத்தகங்களும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டில் காமச்சோடே சந்தைக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் மாணியமாக கிடைத்த ரூபா 20,046,589 பெறுமதியான பொருட்களின் பெறுமதியை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டில் மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்த ரூபா 9,388,784 பெறுமதியான 20 ஒப்பந்தம் சம்மந்தமாக வருட இறுதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அட்டுறு அடிப்படையை பயன்படுத்தி தொடர்புள்ள காலப்பகுதியில் உள்ள தொடர்புள்ள நடவடிக்கை நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கவேண்டிய போதிலும் 2014 ஆண்டிற்கும் மற்றும் அதற்கு முன்னால் உள்ள ஆண்டுகளிற்கும் நடந்திருந்த கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக கணக்கீட்டில் ஏற்பாடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டில் ரூபா 2,060,445 பெறுமதியான திரண்டநிதியில் பதிவளிக்கப்பட்டிருந்தது.

**1.3.2** இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

2015 திசம்பர் 31 திகதிக்கு 10 கணக்கு விடயங்களிற்காக கட்டுப்பாட்டு கணக்கின் படி மீதியின் கூட்டுமொத்த தொகை ரூபா 125,832,924 காணப்பட்டுள்ள போதிலும் இவ் விடயங்களுக்கான பேரேடு, மற்றும் உப பேரேடுகளின் படி அவ் மீதியின் கூட்டுமொத்தத் தொகை ரூபா 125,408,188 ஆக காணப்பட்டமையால் ரூபா 424,736 பெறுமதியான வேறுபாடு உள்ளன.

**1.3.3** பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) அதிகளவான காலங்களாக முதலீட்டிற்கான வட்டியாக கொண்டு வரப்படும் ரூபா 2,820,895 பெறுமதியான நிலுவையை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2015 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்கவேண்டிய ஏனைய வருமான நிலுவை ரூபா 200,459,303 ஆக காணப்பட்ட போதிலும் அந்த நிலுவையில் 12 ஆண்டுகளிற்கு மேலாக 12 நிலுவைகள் உள்ளடக்கியிருந்தது.

(இ) 2015 திசம்பர் 31 ஆந் திகதிக்கு முற்கூட்டிய முற்பணக் கணக்கு மீதி ரூபா 38,463,230 ஆக காணப்பட்டுள்ள போதிலும் அதில் ரூபா 1,414,977 தீர்க்கப்படாத மறுக்கப்பட்ட காசோலைகளின் மீதியும் உள்ளடங்கியிருந்தது. 1992 ஆண்டிலிருந்து 2013 காலப்பகுதிவரைக்கும் ரூபா 1,333,950 பெறுமதியான 91 மறுக்கப்பட்ட காசோலைகள் இது வரைக்கும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2004 ஆண்டிலிருந்து 2010 வரையுள்ள காலப்பகுதிக்கு கொடுக்கவேண்டிய ஓய்வூதிய பங்களிப்பு தொகை ரூபா 15,771,794 தீர்ப்பனவு செய்வதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1986 ஆண்டிலிருந்து 2010 ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் உள்ள களஞ்சிய வரவு மீதி ரூபா 6,983,011 பெறுமதியாக உள்ள போதிலும் இவ் நிலுவையை தீர்ப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) 1981 ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை வேறுபட்ட சில்லறைக் கடன்பட்டோர் நிலுவை ரூபா 18,212,201 ஆக காணப்பட்டுள்ளன. அந்த நிலுவையை அறவிட எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2015 திசெம்பர் 31 ஆம் திகதிக்குள் உள்ள பொது வழற்கல் சென்மதியான மீதி பெறுமதி ரூபா 49,417,305 ஆக காணப்பட்டுள்ள போதிலும் அதில் 10 வருடங்களுக்கு மேலாக கொண்டுவரப்பட்ட ரூபா 2,058,390 பெறுமதியான நிலுவையும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் முடிவு வரைக்கும் இந்த நிலுவையை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.4** கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) பதிலளிக்கப்பட்டிராத கணக்காய்வு ஐயவினாக்கள்

2007 ஆண்டிலிருந்து 2015 ஆண்டு வரையுள்ள காலப்பகுதிக்கு கணக்காய்வு ஐயவினா 23 ற்கு 2016 யூன் 30 ஆம் திகதி வரைக்கும் பதிலளிக்கப்படாமல் இருந்தது.

(ஆ) கணக்காய்வதற்கு தகவல் சமர்ப்பிக்கப்படாமை

கூட்டுமொத்தத் தொகை 129,571,627 பெறுமதியான 06 விடயங்களுக்காக உபபேரேடு மற்றும் மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வினை முறையாக மேற்கொள்ள முடியவில்லை.

**1.3.5** சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு கணக்காய்வில் அவதானிப்பு செய்யப்படுகின்றன.

(அ) நிதி ஒழுங்கு விதி 396 (ஈ) இன் பிரகாரம் 6 மாதங்களிற்கு மேலாக வழங்கப்பட்ட ரூபா 171,376 பெறுமதியான 15 காசோலைகள் சம்மந்தமாக மேலே சிபார்சு செய்யப்பட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதி ஒழுங்கு விதி 881 இன் பிரகாரம் மற்றும் அரச ஊழியர் பாதுகாப்பு வைப்பு சட்டப்படி பாதுகாப்பு எடுக்கவேண்டிய அலுவலர்களுடைய பாதுகாப்பு எல்லை காணக்கூடியளவாக எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1988 ஏப்ரல் 20 ஆந் திகதிய இலக்கம் 20/88 ஆகிய உள்;ராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கைப்படி கிடைக்கவேண்டிய வருமானம் எந்த காலப்பகுதிக்கு சொந்தமாக உள்ளது பற்றி ஒரு கூற்று தயாரிக்கப்பட்டு 3 மாதத்திற்கொரு தடவை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் அவ்வாறு செய்யப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மாநகர முதல்வரினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 126,398,161 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 102,180,961 ஆக விளைந்திருந்தது.

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

மாநகர முதல்வரினால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு தொடர்பான மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் வருமாறு.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) 000’ | உண்மை (ரூபா) 000’ | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) 000’ |
|---|---|---|---|
| ஆதனவரி | 157,040 | 152,795 | 95,220 |
| கடை வாடகைகள் | 17,383 | 22,422 | 14,563 |
| வியாபார உரிமங்கள் | 37,772 | 30,176 | 12,179 |
| ஏனைய வருமானம் | 198,800 | 229,017 | 2,818 |
| மொத்தம் | **410,995** | **434,410** | **124,780** |

### 2.2.2 ஆதனவரி

கொச்சிக்கடை எல்லைக்குள் 2007 ஆண்டுக்கு பின்னர் ஆதனவரி விலைமதிப்பீடு செய்யப்படாமையினால் ஆண்டுக்காக ஆதனவரியாக எடுக்க வேண்டியிருந்த கூடுதலான வருமானம் சபைக்கு கிடைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வியாபார உரிமக் கட்டணங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ம் ஆண்டில் அறவிடப்பட்ட வியாபார உரிமைக் கட்டணம் 26 வியாபாரங்கள் சம்மந்தமாக 152 நிறுவனங்கில் மீளாய்வாண்டில் வியாபார உரிமங்கள் அறவிடப்படாமையினால் ரூபா 368,155 பெறுமதியான வியாபார உரிமைக் கட்டணம் சபைக்கு கிடைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாநகரசபை எல்லைக்குள் உள்ள விடுதிகளை நடாத்தும் இலங்கை சுற்றுலாச் சபைச் சட்டத்தில் பதிவு செய்திருந்த கோட்டல், லொச் மற்றும் போசனசாலை 27 ற்கு மீளாய்வாண்டில் வியாபார உரிமைக்கட்டணம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநகரசபை சட்டத்தில் 247 (ஆ) பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையில் பதிவு செய்திருந்த அல்லது சிபார்சு செய்யப்பட்டிருந்த கோட்டல், லொச் மற்றும் போசனசாலையின் வருமானத்தில் 1 வீதம் வியாபார உரிமைக்கட்டணம் அறவிடவேண்டும். 2015 ஆம் ஆண்டிற்கு

உரிமைக்கட்டணம் தீர்மானம் செய்யும்போது போசனசாலையில் மட்டும் 1 வீதம் அறவிடுவதற்கும் கோட்டல் மற்றும் லொச்சில் 1 அறைக்கு ரூபா 3,221 பெறுமதியான கட்டணம் அறவிடுவதற்கும் தீர்மானம் எடுத்து 8 போசனசாலையில் வியாபார உரிமை 1 வீதம் கட்டணமும் 17 கோட்டலிலும் மற்றும் 3 லொச்சிலும் அறை எண்ணிக்கைப்படி கட்டணம் அறவிட இருந்தது.

**2.2.4** நீர்கொழும்பு பஸ்நிலையத்தில் பஸ்தரிப்பிட கட்டணம் அறவிடுதல்

நீர்கொழும்பு பஸ்நிலையத்தில் பஸ்தரிப்பிட கட்டணம் அறவிடுதல் சம்மந்தமாக 2015 ஜனவரி 01 இல் மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சேவை வரிசை முறைப்படி பஸ் தரிப்பிடத்திற்கு கட்டணம் அறவிடுதல் சம்மந்தமாக கடமை செய்த இரு ஊழியரை பயன்படுத்தி இருந்த போதிலும் பஸ் நிலையத்திற்கு உள்வரும் போது அனுமதிக்கட்டணம் ரூபா 50 ரிக்கட் வழங்கப்பட வேண்டி இருந்தது. இந்த அனுமதிக் கட்டணத்தின் பஸ் இலக்கம், வந்தநேரம், சென்றநேரம், திகதி மற்றும் காசு பெற்றவரின்

கையொப்பம் குறிப்பிடவேண்டிய போதிலும் அனுமதிக்கட்டணப் பத்திரம் பார்க்கும் போது அவ்வாறு காணப்படவில்லை.

(ஆ) தினசரி சேகரிக்கும் பஸ்தரிப்பு கட்டணம் அத்திகதியில் காரியாலயத்திற்கு செலுத்த வேண்டியபோதிலும் கட்டணம் அறவிட்ட ஊழியர்கள் ஒரு நாளில் இருந்து 7 நாட்கள் வரையான காலப்பகுதியில் காசு கையில் வைத்திருந்து வைப்பு செய்வதற்கு தாமதமாகியிருந்தது.

(இ) மேல் மாகாண வீதி போக்குவரத்து அதிகாரியின் பஸ் செல்லும் இரு வார நேர அட்டவணைப்படி பஸ் சென்ற கால விபரங்களுக்கும் அவர்கள் சேகரித்த கட்டணத்தை பார்க்கும் போது குறைவாக காணப்படுகின்றது. அந்த அறிக்கைப்படி 2015 மார்ச் 16 ஆந் திகதியில் இருந்து மார்ச் 30 ஆந் திகதி காலப்பகுதிக்கு அறவிடவேண்டிய கட்டணம் ரூபா 355,200 ஆக காணப்பட்ட போதிலும் காரியாலயத்தின் செலுத்திய கட்டணம் 178,950 ஆக காணப்பட்டமையால் ரூபா 176,250 பெறுமதியானவை குறைவாக சபைக்கு கிடைத்துள்ளமை தொடர்பாக வெளிப்படுத்தப்படுகின்றது.

**2.2.5** திண்மக்கழிவிற்கான கட்டணம்

2008 யூலை 30 ஆந் திகதிய 1560/6 ஆம் இலக்க வர்த்தகமானி அறிவித்தலின் பிரகாரம் 2008 இலக்கம் 01 ஆகிய திண்மக்கழிவு முகாமைத்துவ விதிகள் சகல உள்;ராட்சி அலுவலகங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும் என 2010 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் எல்பிடி/05/08/பொது.'.வெலும ஆகிய மேல்மாகாண உள்;ராட்சி ஆணையாளரின் கடிதம் மூலம் அறிவித்திருந்த போதிலும் மாநகர சபையினால் பின்பற்றப்படவில்லை. மீளாய்வாண்டில் அதற்காக வருமானம் மதிப்பிடப்படாமல் இருந்தது. அதனால் அந்த விதிகளில் குறிப்பிடப்பட்ட வருமானம் சபைக்கு கிடைக்காமல் உள்ளது.

**2.3 மேலதிக கட்டணம்**

மாநகர சபை சட்டம் (252 வது அத்தியாயம்) 226 (1) இலக்க கட்டளைப்படி பொறுப்புள்ள நபருக்கு எதிராக 1995 ஆம் ஆண்டில் இருந்து கணக்காய்வு தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட மேலதிகமான கட்டணத்தின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடவேண்டியிருந்த மேலதிக கட்டணமான தொகை ரூபா 24,854,584 இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

#### 3.1.1 வங்கி மேலதிகப் பற்று

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதி ஒருங்கு விதி 387 இன் பிரகாரம் வங்கி மேலதிகப் பற்று எடுக்கப்படகூடாது என குறிப்பிடப்பட்டிருந்தும் சபையினால் 2007 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வங்கி மேலதிகப் பற்று எடுத்திருந்தது. 2015 மே 26 ஆந் திகதிக்கு காணப்பட்டிருந்த ரூபா 20,000,000 பெறுமதியான வங்கி மேலதிகப் பற்று வரையறை காணப்பட்ட போதிலும் 2015 மே 27 ஆந் திகதியில் இருந்து 25,000,000 பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அதற்காக ரூபா 31,200,000 பெறுமதியான நிலையான வைப்பு உத்தரவாதமாக வைக்கப்பட்டிருந்தது.

(ii) சபைக்கு சொந்தமாக ரூபா 46,700,000 நிலையான வைப்பு இருந்த போதிலும் வங்கி மேலதிகப் பற்று தீர்க்கப்படாமல் மேலும் வங்கி மேலதிகப் பற்றினை பெற்றுக் கொண்டமை நிதிக்கட்டுப்பாட்டின் பலவீனமாக கணக்காய்வில் அவதானிக்கப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டிலிருந்த மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் வங்கி மேலதிகப் பற்று வட்டிக்காக ரூபா 14,146,254 கொடுப்பனவு செய்திருந்தது.

#### 3.1.2 இடர்கடன்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இடர்கடனுக்காக வேறாக வங்கிக் கணக்கு பராமரிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டில் சபை பொது வங்கிக் கணக்கில் இருந்து இவ் வங்கிக் கணக்கிற்கு ரூபா 2,500,000 மாற்றம் செய்யப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு இடர் கடன் கணக்கு நிலுவை ரூபா 2,608,211 காணப்பட்டுள்ளது. இதனால் மாற்றம் செய்யப்பட்டிருந்த மொத்த நிலுவையும் மீதியாக காணப்பட்டுள்ளதனால் சபை நிதி இக்கணக்கிற்குள் தேவையற்று முடக்கி வைக்கப்பட்டது போல காணப்பட்டிருந்தது.

(ii) உச்ச எல்லை ரூபா 250,000 இடர்கடனாக எடுக்கப்படலாம் என இருந்த போதிலும் இரு அலுவலர்களுக்கு அவ் எல்லையை தாண்டி இடர்கடன் வழங்கப்பட்டிருந்தது.

(iii) ஒதுக்கீடு உள்ளமை பற்றி உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டுமென சபைக்கு பொறுப்பு இருந்த போதிலும் ரூபா. 9,092,906 பெறுமதியான 12 சபை வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கீடு இன்றி மீளாய்வாண்டில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

#### 3.1.3 அத்துமீறிய நிர்மாண வேலை

எரிபொருள் நிரப்பு நிலையம் கட்டுவதற்காக கட்டட அனுமதி சிபார்சு செய்வதற்காக கொச்சிக்கடை உப அலுவலகத்திற்கு 2015 ஜனவரி 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த விண்ணப்பத்திற்கு அனுமதி வழங்குவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையில் வீதி பற்றிய பிரச்சனைகள் இல்லை என்ற உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்ளவில்லை என 2015 பெப்ரவரி 16 ஆந் திகதி மாநகர முதல்வர் உரிமையாளருக்கு அறிவித்திருந்தார். இந்த நிர்மாணம் அனுமதியின்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையில் அறிவித்திருந்த போதிலும் கட்டட விண்ணப்பம் அனுமதி வழங்கப்பட்டு 2016 மே மாதம் அவ்வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

### 3.2. செயற்பாட்டு செயற்திறனின்மை

#### 3.2.1 கொச்சிக்கடை எல்லைக்குள் குப்பைகள் எடுத்தல்

(i) கொச்சிக்கடை எல்லைக்குள் குப்பைகள் எடுப்பதற்காக விலை மனுக் கோரப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்த போதிலும் நகர சபை சிரேஸ்ட பிரதம சுகாதார பரிசோதகர் மற்றும் கொச்சிக்கடை எல்லைக்குள் உள்ள சுகாதார பரிசோதகரும் சேர்ந்து அவர்களின் பங்களிப்புடன்

2015 ஒக்டோபர் 12 இல் இருந்து 15 ஆம் திகதி வரை செய்யப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது பின்வரும் ஒப்பந்தத்தில் உள்ள செயற்பாடுகள் செய்யப்படவில்லை என்பது பற்றி அவதானிக்கப்பட்டிருந்தது.

- வீதி, சீமெந்து வடிகால் கூட்டுதல், துப்பரவாக்குதல்
- மதகிற்குள் உள்ள கால்வாயை துப்பரவாக்குதல்
- தேவையற்ற சிறிய செடிகள், சுவரொட்டிகள், பதாதைகள் போன்றவற்றை எடுத்தல்
- ஓவிற்றியாவத்த குப்பைகள் நிலத்தில் பரப்பப்பட்டு அதற்கு மேல் கிரவல் போடுதல். 2015 ஆகஸ்ட் மாதத்திலும் ஒக்டோபர் மாதத்திலும் செய்யப்படவில்லை.

(ii) குப்பைகள் எடுப்பதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் அவ்வேலைகள் செய்யப்படாமல் இருக்கும் காலப்பகுதியில் அவ்வேலைகள் நன்றாக செய்யப்பட்டது என எழுத்து மூலமான ஆவணம் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் மேற்பார்வையாளரின் கடமை முறையாக செய்யப்படவில்லை.

### 3.2.2 நீர்கொழும்பு புதிய பஸ்தரிப்பிட கடைக் கட்டட தொகுதியில் கடைகள் வாடகைக்கு வழங்குதல்

---

2வது மாடி கட்டுமானம் செய்யப்பட்ட வேலையில் குறைபாடு இருந்தமையால் இலக்கம் 66 கடை 2014 ஆம் ஆண்டிலிருந்து வாடகை அறவிட சபைக்கு இயலாதுள்ளது.

### 3.2.3 வீதி மின் விளக்குக்கான கட்டுப்பாடு

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து 2015 திசெம்பர் 04 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் களஞ்சியத்தில் 1671 வீதி விளக்குகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக அகற்றப்பட்ட வீதி விளக்குகள் மற்றும் உபகரணங்களுக்கு மீள களஞ்சியத்திற்கு வழங்குவதற்கான முறைமை காணப்படவில்லை.

(ii) களஞ்சியத்தில் 17 வீதி விளக்குகளும் மின்சாரப் பிரிவில் 140 வீதி விளக்குகளும் குறைவாக உள்ளமை 2015 திசெம்பர் 02 ஆம் திகதியில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டிருந்தன.

(iii) மின்சாரப் பிரிவு களஞ்சியத்தில் எடுக்கும் வீதி விளக்குகள் பற்றியும் மற்றும் பராமரிக்கப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு ஒன்று பராமரிக்கப்படவில்லை.

(iv) சபை ஆண்டு செயற்திட்டப்படி வீதி விளக்கு தூண் இலக்கமிடப்பட்ட முறைமை ஒன்று திட்டமிட்டிருந்த போதிலும் இதுவரைக்கும் அது செய்யப்படவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

---

### 3.3.1 நீர்கொழும்பு புதிய பஸ் தரிப்பிடத்தில் மின்சார படிகள் பராமரிக்கப்படுதல்

---

மேற்படி மின்சாரப் படிகள் பராமரிக்கப்படும் காலம் 2012 நவம்பர் மாதத்தில் முடிவடைகின்றது என அறிவித்த வருடாந்தம் பராமரிப்பு செய்வதற்காக ரூபா 466,839 பெறுமதியான 2013 இல் இருந்து 2015 வரைக்கும் தனியார் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி மின்சாரப் படிகள் பஸ் தரிப்பிடத்தின் உள் 2011 ஆம் ஆண்டிலிருந்து வேலை செய்யப்படவில்லை என்பதனால் வேலை செய்யப்படாது இருக்கும் மின்சாரப் படிகள் பராமரித்தலுக்காக கொடுக்கப்பட்ட கொடுப்பனவு பயன்பாடற்றதாக காணப்பட்டிருந்தது.

### 3.3.2 2014 ஆம் ஆண்டில் கிரவல் விநியோகம் செய்தல்

---

04 மைதானத்திற்காக கிரவல் விநியோகம் செய்வதற்கு வருட ஆரம்பத்தில் விலை கோரப்பட்டு வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த அடிப்படையில் கிரவல் கொள்வனவு

செய்யப்பட்டிருந்தது.இது சம்மந்தமாக செய்யப்பட்ட பரீட்சிப்பின் போது பீன்வரம் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(i) 2014 ஆம் ஆண்டில் கிரவல் விநியோகம் செய்ய வழங்குனர்கள் பதிவு செய்த போதிலும் மற்றும் கிரவல் பரப்புவதற்காக பொறிகள் சபைக்கு சொந்தமாக இருந்தபோதிலும் மைதானம் அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் கிரவல் கியூப் 2041.2 கொள்வனவு செய்யப்பட்டு பரப்புவதற்காக ரூபா 7,069,045 கொடுப்பனவு செய்திருந்தது.

(ii) சபைக்கு சொந்தமான பக்கோ லோடர் ஒன்றும் மற்றும் இரு ஸ்கீட் லோடர் இருந்த போதிலும் அதில் ஒரு சேவையையும் பெற்றுக்கொள்ளாது வேறு தனியார் நிறுவனத்திடம் சேவையை பெற்றிருந்தது.

(iii) பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களில் குறைந்த விலைக்கு கிரவல் கொள்வனவு செய்யப்படாது ஒப்பந்த அடிப்படையில் கிரவல் கொள்வனவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

### 3.3.3 நீர் அணைக்கட்டு மீள்நிர்மானம்

ஒரு கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டம் அபிவிருத்தி திட்டத்தில் தலுவகொட்டுவ கிராம சேவையாளர் பிரிவில் சகல நீர் அணைக்கட்டு மீள் நிர்மாணம் செய்வதற்காக நீர்கொழும்பு பிரதேச செயலாளர் 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,000,000 ஒதுக்கீடு கிடைத்திருந்தது. இதற்காக ரூபா 1,993,290 பெறுமதியான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அவ்வேலைத்திட்டம் ரூபா 1,737,020 க்கு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2014 செப்தெம்பர் 10 ஆந் திகதி கையொப்பமிட்ட ஒப்பந்தப்படி இரு மாதத்திற்கு முன்னர் நிர்மாணம் செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டி இருந்தது. 2014 நவம்பர் 01 ஆம் திகதி வேலை முடிவடைந்தது என அறிவித்திருந்த போதிலும் 2015 மார்ச் 25 ஆம் திகதி ரூபா 1,841,241 ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவு செய்திருந்தது.

இது சம்மந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்த வேலைத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் படி செய்யப்படவில்லை எனவும் செய்யப்படாமல் உள்ள வேலைகளுக்காக கொடுப்பனவு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருந்தமை மோசடித்தன்மை வாய்ந்ததாகவும் மற்றும் மேற்பார்வை அலுவலர்களும் கொடுப்பனவு பற்றுச்சீட்டிற்கு அனுமதி வழங்குவோரும் பற்றி விசேட கவனிப்பு மேற்கொள்ள வேண்டுமென பிரதேச செயலாளர் 2014 திசெம்பர் 04 ஆந் திகதி அறிவித்திருந்தது. 2014 நவம்பர் 11 ஆந் திகதி சபை பொறியியலாளருடையதும் தொழில்நுட்ப உத்தியோகத்தரினதும் கணியச்சிட்டையின் பிரகாரம் அவர்கள் அவ் கணியச்சிட்டை அவதானிப்பு செய்தது என்றும் அது சரி என்றும் சான்றுப்படுத்தியிருந்த போதிலும் 2014 நவம்பர் 26 ஆந் திகதி நகர ஆணையாளரினால் சிபார்சு செய்யப்பட்டும் 2014 நவம்பர் 27 ஆந் திகதி முதல்வரினால் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ii) அவ்வேலைத்திட்டம் தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவையாளருடைய பங்களிப்புக்களுடன் வேலை முடிக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டுமென 2014 திசெம்பர் 17 ஆந் திகதிய கடிதத்தின் மூலமாக நகர ஆணையாளரினால் அவ் ஒப்பந்தாரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(iii) 2015 மே 11 ஆந் திகதி பிரதேச செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு ஏற்றுக்கொள்ள முடியாத அளவு வேலை செய்யப்படவில்லை என்றும் செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கு உண்மையான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது.

(iv) செய்யப்பட்டிராத வேலைத்திட்டம் சம்மந்தமாக சிபார்சு செய்யும் மற்றும் சான்றுப்படுத்தும் அலுவலர்கள் மீது சபை மூலமாக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.4 மண்குழிய மைதானம் அபிவிருத்தி செய்தல்

மண்குழிய மைதானம் அபிவிருத்தி செய்வதற்காக கிரவல் விநியோகம் செய்யப்பட்டு மட்டப்படுத்துவதற்காக 510.3 கியூப் கிரவல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2014 மே 16 ஆந் திகதி ரூபா 1,776,149 க்கு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. கணியச்சிட்டையின் பிரகாரம் நீளம் 360 அடியும் அகலம் 189 அடியும் உயரம் 0.75 அடிக்காக 510.3 கியூப் கொள்வனவு செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கிரவல் பரப்புவதற்கு முன்னர் குவிக்கப்பட்ட

குவியல் கணிப்பீடு செய்வதற்கு மேற்பார்வையாளர் இல்லாமை 2015 மார்ச் 04 ஆந் திகதி பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டிருந்தது

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

காமச்சோடே புதன்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சந்தை வாடகை கொடுப்பது சம்மந்தமாக 2015 ஏப்ரல் 16 ஆம் திகதி செய்யப்பட்ட பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 செப்தெம்பர் 22 ஆம் திகதி 625 ஆகிய நிதிக்குழு கூட்ட சிபார்சின் படியும் மற்றும் 2014 ஒக்டோபர் 2ஆம் திகதி இலக்கம் 5.'.5 சபைத் தீர்மானத்தின் பிரகாரம் காமச்கோடே புதன்கிழமை சந்தை 2014 ஆம் ஆண்டில் வாடகைக்கு கொடுத்த தொகைக்கு 10 வீதம் கூடுதலாகவும் 2015 ஆண்டிற்காக புதுச்சந்தை திறக்கப்படும் வரை வாடகைக்கு கொடுப்பதற்கும் அதற்காக வாடகைக்கு பெறுவோரின் கடிதம் எடுப்பதற்கும் தீர்மானம் எடுத்திருந்தது.

(ii) சந்தை திறக்கப்பட்ட பின்னர் மரக்கறி மற்றும் பழங்கள், புடவைகள் மற்றும் கருவாடு ஆகிய 3 பிரிவுகளாக பிரித்து கேள்வி கோரலுக்காக தீர்மானம் எடுத்திருந்த போதிலும் புதுச்சந்தையை திறக்கும் வரைக்கும் மட்டும் என்ற பந்தி ஒப்பந்தத்தில் சேர்க்கப்படாமல் 2015 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2015 திசெம்பர் 31 காலப்பகுதி வரைக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்தது.

**3.5 விளைவற்ற சொத்துக்கள்**

---

2015 பெப்ரவரி 06 ஆந் திகதி பொது நிர்வாக மாகாண சபைகள் உள்;ராட்சி மற்றும் சமூக கட்டுப்பாடு ஆகிய அமைச்சகத்தில் உள்;ராட்சி நிறுவனம் பலமாக உருவாக்க மாணியமாக மோட்டர் கிறைடர் ஒன்றும் உழவு இயந்திரம் ஒன்றும் மற்றும் சிங்கிள் றோலர் ஒன்றும் சபைக்கு கிடைத்திருந்த போதிலும் மோட்டார் கிறைடரும் மற்றும் உழவு இயந்திரமும் 2015 நவம்பர் 10 ஆந் திகதி வரைக்கும் எந்தவிதமான வேலைக்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றதாக உள்ளது.

**4. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

---

**4.1 பெறுகைத் திட்டம்**

---

2006 மார்ச் 24 ஆந் திகதி இலக்கம் 128 ஆகிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கைப்படி ஆண்டு பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

மீளாய்வாண்டிற்காக 09 வாக்கு விடயங்களுக்காக கிடைத்த மொத்த ஒதுக்கீட்டில் எந்த விதமான செலவும் செய்யப்படாது காணப்பட்டமையால் பாதீடு முறையான கட்டுப்பாட்டிற்காக பயன்படுத்தப்படவில்லை.

**4.3 செயற்திறன்**

---

ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ள 10 செயற்பாடுகள் மீளாய்வாண்டில் செய்வதற்கு சபை தவறியுள்ளது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்